பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

....நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.

ஆமோஸ் 5:14

செய்தி மலர்
2015
ஜனவரி

இதழ் : 8
மலர் : 15



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர சகோதரிகட்கு
கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் சபையின் செயற்குழு மற்றும் எங்கள் குடும்பத்தின் சார்பாக புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

தேவனின் பெரிதான கிருபையால் 2015 ஆம் ஆண்டின் I ஆவது மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார்.

இந்த மாதம் வரைக்கும் நம்மை நடத்தி வந்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நமது குடும்ப வாழ்க்கையில், ஆவிக்குரிய வாழ்க்கையில், ஊழியத்தில், சபையின் ஆராதனைகளில் தேவ கிருபையின் சமூகம் நம்மோடு இருந்து, நம்மை காத்து, வழி நடத்தி வந்தமைக்காய், நன்றி செலுத்துவோம்.

வாக்குதத்தத்தில் உண்மையுள்ளவராய் நம்மை, வாக்குதத்தத்தினால் நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தும், அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். நம்முடைய அக்கிரமங்களுக்காக தக்க தண்டனை தராதபடிக்கு, மேற்குக்கும் கிழக்கிற்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.(சங் 103:12)

கடந்த வருட சபை வாக்குத்தத்தின்படி "**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்,**(யோவான் 8:32) என்ற வசனத்தின்படி, எவ்வளவு சத்தியத்தை அறிகிறோமோ அவ்வளவு விடுதலை நிச்சயம் உண்டு, ஒரு விடுதலையின் ஆண்டாகவே நிச்சயம் இருந்திருக்கும் இந்த வேளையில், வியாதியில், கவலையில், போராட்டங்களில், இப்படியாக பல சாத்தானின் பிடியில் இருந்து நம்மை விடுதலை பண்ணியதை நாம் உணர முடியும், அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

2015 ம் வருடம் சபையின் வாக்குத்தத்தமாக "**..நீங்கள் சொல்லுகிறபடி சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடு இருப்பார்.**" (ஆமோஸ் 5:9)

2015 – ம் வருடம் ஒரு அதிகாரமுள்ள வருடம், நம்முடைய நாவிலே தேவன் அதிகாரத்தை தருகிறார். தேவன் நமக்கு தம்முடைய பிள்ளைகள் என்கிற அதிகாரம் தந்திருக்கிறார், அது போல தம்முடைய நேசகுமாரனாகிய இயேசுவின் மேலிருந்த அதிகாரத்தையும் தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கும் தருகிறார். இயற்கைகளை ஆள அதிகாரம், பிசாசின் மேல், உலகத்தின் மேல் , பொருட்கள் மேல், இப்படி எல்லாவற்றின் மேலும் ஆளும் அதிகாரத்தை தேவன் நமக்கு தருகிறார்.

பிரியமானவர்களே! அதிகாரத்தை நாம் பயன்படுத்தவேண்டுமானால், நாம் வாயை திறந்து பேச வேண்டும், சொல்ல வேண்டும் சங்கீதக்காரன் 91ஆவது சங்கீதத்தில் "நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர், என்று சொல்லுவேன், (சங் 91:2) என்று பேசுகிறார்.

இந்த வருடத்தில் தேவன் நமக்கு ஆசீர்வாதத்தை தருகிறார், நீ சொல்லுகிறபடியே நான் உன்னோடு இருப்பேன் என்று வாக்கு பண்ணுகிறார், ஆனபடியால் கடன் இல்லாமல் ஆசீர்வதிப்பார் என்றால், அப்படியே உங்களை ஆசீர்வதிப்பார், அது போல வியாதி இல்லாமல், வேலையில் பிரச்சனையில்லாமல், விசாவில் பிரச்சனையில்லாமல், குடும்பத்தில் பிரச்சனையில்லாமல், தேவன் காப்பார் என்று எப்போதும் Positive- வாக சொல்லி (or) பேசி ஆசீர்வாதம் பெற்ற வேதத்தில் பலர் உண்டு அது போல தேவன் positive-வாக பேசு என்றபோதும், Negative-வாக பேசி ஆசீர்வாதம் இழந்தவர்களுக்கும் உண்டு, இது சாத்தானின் தந்திரம், (or) கண்ணி, ஆனபடியால் தைரியமாக கிருபாசனத்தண்டையில் நெருங்கி, தேவனோடு பேசுவோம். சங்- 91ல் அநேக ஆசீர்வாதங்கள் உண்டு இது உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவனுடையது.

பிரியமானவர்களே ! உன்னதமானவரின் மறைவுக்குள் இந்த நாள் முதல் அர்பணிப்போம், அதிகாரத்தை பயன்படுத்தவோமாக !

தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக என்று சொல்லி வாழ்த்துகிறேன்! ஆமென்!.

கிறிஸ்துவின் பணியில்

**அன்பு சகோதரன் R.ரவிச்சந்திரன்**

## பைபிளை மனபாடம் செய்தவர்

ஜெர்மனியின் தேசிய நூலகம் மியூனிக் நகரில் உள்ளது. இந்த நூலகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பணியாற்றிய ஒருவர் ***பென்ஹார்ட் டோசென்.*** இவர் ஒரு சமயத்தில் 9 செயலாளர்களிடம், 9 மொழிகளில், 9விதமான கடிதங்கங்குளுக்கு தகவல் சொல்லி எழுதி வைப்பார். பைபிளில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, இரண்டையும் ஒரு வார்த்தை தவறாமல் மனப்பாடமாக சொல்லும் திறன் பெற்றிருந்தார். 1828-ம் ஆண்டு இவர் மரிக்கும் வரை நிறைவாற்றல் இவருக்கு இருந்தது.

நீங்கள் எப்படி? வேதம் வாசித்தீர்களா? எத்தனை வசனம் மனப்பாடமாக தெரியும்? வேதத்தை ஒரு முறையாவது முழுவதும் படித்து முடித்திருக்கிறீர்களா? ஒரு நாளைக்கு 3 அதிகாரம் என்றால் ஒரு வருடத்தில் முழு வேதாகத்தை முடித்து விடலாமே.

முயற்சிப்போமா இந்த ஆண்டில் !

வாசிப்பது மட்டும் அல்லாமல் தியானிப்போம் (விசுவாசிப்போம்)

# 2015 ஆம் ஆண்டு வாக்குத்தத்த தேவ செய்தி

**"நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்".** (ஆமோஸ் 5:14)

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் புது வருட வாழ்த்துக்கள், இந்த புது வருடத்தில் அதிகாரத்தை நமக்கு தருவேன் என்று தேவன் வாக்கு பண்ணுகிறார். மரணமும் ஜீவனும், நாவின் அதிகாரத்தில் இருக்கும், அதில் பிரயாச படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள் நீதி 18:21 நம்முடைய தேவன் நமக்கு அதிகாரத்தை தந்திருக்கிறார். நாம் நினைப்பது போல ஒரு சிலரை பார்க்கும் போது பணப் பலம், ஆள் பலம், பதவி பலம், உள்ளவர்கள்தான் அதிகாரம் உள்ளவர்கள் என்று நினைக்கலாம், ஆனால் நம்முடைய ஆண்டவர்தான் நமக்கு மாதிரி, ஒரு ஏழை குடும்பத்தை தெரிந்தெடுத்தார், பணபலம் இல்லை, ஆள்பலம் இல்லை, பதவி பலம் இல்லை, ஆனால் பரிசுத்த ஆவியினால் நிறைத்திருக்கிறார், அதுதான் உன்னத அதிகாரம், பரிசுத்த ஆவியினால் நிறைந்து நாவில் அதிகாரத்தை பயன்படுத்திய சிலரை தியானித்து, இந்த வருடம் முழுவதும் அவர்கள் பெற்ற ஆசீர்வாதத்தை நாமும் பெற்று அனுபவிப்போம்.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.(சங் 23:6)

<u>நன்மை தொடரும்</u> : தாவீது தன் நாவை அதிகாரமுடன் பயன் படுத்துகிறார், நன்மை என்னை தொடரும் என்று சொல்லுகிறார், அப்போது அவர் இருந்த சூழ்நிலை தீமைகள் அவரை சூழ்ந்திருந்தது, மரண பயம் இருந்தது, ஆனால் தாவீது நன்மை என்னை தொடரும் என்று சொல்கிறார். அப்படி சொல்லும் போது தீமையை நன்மையாக மாற்றும் தேவன் அவர் சொன்னபடியே எதிராக வந்த தீமைகளை நன்மையாக மாற்றினார்.

<u>கிருபை தொடரும்</u> : நன்மை மாத்திரம் நம்மை தொடர்ந்தால் போதாது, நமக்கு தேவனுடைய கிருபை வேண்டும். நமக்கு இல்லாத போது பெற்ற நன்மைகளையும் தக்க வைக்க முடியாமல் போய் விடுகிறோம், நல்லது வேண்டும் என்று ஜெபிக்கிற(அல்லது) சொல்லுகிற நாம், நமக்கு கிருபை வேண்டும் என்று சொல்லுவது கிடையாது, ஆனபடியால் கிருபை மிகவும் முக்கியமானது,இரட்சிப்புக்கு கிருபை முக்கியம், (நாம் கிருபையால் இரட்சிக்கப்பட்டோம்– எபே 2:8) ஆனால் தொடர்ந்து அதிகாரமுள்ள வாழ்க்கையில் ஜீவித்திருப்பதற்கு நமக்கு கிடைத்த நன்மைகள் நிலைத்திருக்க கிருபை என்னை தொடரும் என்று விசுவாசத்தில் சொல்லுவோம், எத்தனையோ ஆசீர்வாதங்கள் நமக்கு வந்திருக்கலாம், ஆனால் பல பிரச்சனைகள், இழப்புகள் என்று வேதனையுடன் இருப்பவர்கள், இந்த தாவீதை போல் விசுவாசத்துடன் நன்மையும் கிருபையும், என்னை தொடரும் என்று இந்த வருடத்தில் சொல்லுவோம், அப்படியே தேவன் நம்மோடிருப்பார்.

<u>நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்:</u> ஒரு வேளை சரீரத்தில் வியாதி, பெலவீனமாக இருக்கலாம் தாவீது போல நாமும் சொல்ல வேண்டும், நீடித்த நாட்களாய் கர்த்தருடைய வீட்டில் நிலைத்திருப்பேன்.

நாம் நீடித்த நாட்களை விரும்பி கேட்கலாம் ஆனால் தாவீதை போல " கர்த்தருடைய வீட்டில்" இதுதான் தாவீதிடமிருந்து நாம் கற்று கொள்ள வேண்டும், வாக்குத்தத்த ஆராதனை மாத்திரம் கர்த்தருடைய வீடு, பின்பு முக்கிய பண்டிகைகள் கர்த்தருடைய வீடு என்பது அல்ல, தாவீது பெரிய ராஜா, பல காரியங்களை கவனிக்கவேண்டும் ஆனாலும் ஆலயத்தின் மேலுள்ள தாகம் கூடிக்கொண்டே போனது, இன்று நமக்கு, வியாபாரத்தில் பிசி, வேலையில் பிசி, குடும்பத்தில் பிசி, பிள்ளைகள் பராமரிப்பில் பிசி இவைகள் எல்லாம் போக நேரமிருந்தால் கர்த்தருடைய வீடு. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம்கூட கொடுக்கப்படும்" மத்– 6:33. இந்த 2015 ம் வருடத்தில் ஒரு பொருத்தனையோடு கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் என்று

சொல்லுகிற போது, உங்கள் வியாதி, பெலவீனத்திலிருந்து, நீங்கள் விடுதலையடைவதை உணரமுடியும்.

<u>மரண இருளின் பள்ளதாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்</u>: தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். (சங் 23:4)

தாவீது மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் தேவரீர் என்னோடே இருக்கிறீர் என்று சொல்லுகிறான். இது போன்ற அனுபவங்கள் சூழ்நிலைகள் உங்களுக்கு இருக்கிறதா? நமக்கு அதிகாரத்தை தேவன் தந்திருக்கிறார் நம்முடைய நாவில் அதிகாரம் உண்டு, ஆனபடியால் இருள் போன்ற சூழ்நிலையிலும் பயப்பட வேண்டாம். இது பிசாசு வைக்கும் உபாயம்தான், ஆனால் இவைகள் மத்தியிலும் தேவன் கூடஇருந்தால், அது நமக்கு பரலோகம், இது நமக்கு வெளிச்சம், இந்த வருடத்தை ஆரம்பிக்கிற பிரியமானவர்களே! தேவனை நோக்கி நான் இந்த பிரச்சனைகளுக்கு, வேதனைகளுக்கு, தோல்விகளுக்குபயப்படேன், ஏனென்றால் நீர் என்னோடு இருக்கிறீர், என்று விசுவாசத்துடன் அறிக்கையிட்டு சொல்லுவோம், குடும்ப ஜெபத்தில், ஆலய ஆராதனையில், அன்றாடம் எப்போதும் சொல்லுவோம். தாவீதோடு இருந்தவர் நம்மோடும் இருப்பார், நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே கூட இருப்பார்.

லோத்து என்ற ஒரு மனிதனையும் வேதத்தில் காணலாம், இவரை வேதம் நீதிமான் என்று காட்டுகிறது. (2 பேதுரு 2:8) ஆனால் இவர் சொல்லுகிறார் ஆதி 19:19 –ல் , என்னால் முடியாது, தீங்கு என்னைதொடரும், நான் மரித்து போவேன், அது தேவனுடையசித்தமல்ல, நீ பிழைக்கும்படி அந்த மலைக்கு ஓடிப்போ, நில்லாதே என்பதுதான் தேவ சித்தம். அவன் இரட்சிக்கப்பட்ட நீதிமானாயிருந்தும், அழிவை கண்டான் நமது வாயின் வார்த்தை அதிகாரமுள்ள வார்த்தை அதில் பிரியபடுகிறார்கள் அதின் கனியை புசிப்பார்கள்– (நீதி 18:21)

பிரியமானவர்களே! கிறிஸ்தவ குடும்பத்தை சார்ந்தவனாக இருக்கலாம், இரட்சிக்க பட்டவர்களாக இருக்கலாம், இப்பொழுது எப்படி உங்கள் நிலை, தாவீது போல் நன்மையும் கிருபையும் என்னை தொடரும் என்று சொல்லுகிறீர்களா? அல்லது லோத்தை போல தீமை என்னை தொடரும் எனறு சொல்லுகிறீர்களா?

இருவரையும் தேவன் நேசிக்கிறார், ஆனால் எப்படி விசுவாசத்துடன் சொல்லுகிறோமோ அப்படியே தேவன் உங்கள் வாழ்க்கையில் இடைபடுவார்.

இந்த 2015 –ம் வருடத்தில் நீங்கள் சொல்லுகிறபடியே, சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. உங்களிடத்தில் அந்த அதிகாரத்தை தந்திருக்கிறார் சரியானபடி பயன்படுத்துவது நம்மிடத்தில் உள்ளது

பிசாசின் தந்திரங்களை, தடைகளை மேற்கொள்ள பரிசுத்த ஆவியில் நிரப்பப்பட்டு சொல்லுவோம், அப்படியே இந்த வருடம் முழுவதும் தேவன் நமக்காய் செயல்படுவார்.

எல்லாவற்றையும் ஜெயித்த இயேசுதான் நமக்கு மாதிரி. பரத்திலிருந்து அதிகாரம் யாருக்கும், கொடுக்கபடாவிட்டால், யாருக்கும் அதிகாரம் இல்லை இது பிலாத்துவினிடத்தில் ஆண்டவர் இயேசு சொன்னது

நம் சபைக்கு, தனிபட்ட விதத்தில் இந்த வருடத்தில் தேவன் மறுபடியும் வாக்கு பண்ணுகிறார்.

**நீங்கள் சொல்லுகிறபடியே உங்களோடு இருப்பேன் என்பதாக!.**

## தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக

கிறிஸ்துவின் பணியில்

அன்பு சகோதரன் R. ரவிச்சந்திரன்

# உலக சிநேகத்தால் உலகத்தை விட்டு போனவன்

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் பிரசங்கத்தில் சொல்லும்போது ஒருவன் எருசலேமைவிட்டு எரிகோவுக்கு போனான் என்று வாசிக்கிறோம் (லூக் 10:30-37) அவன் ஏன் எருசலேமை விட்டு எரிகோவுக்கு போனான் என்று ஆராய்ந்தால் ஒரு காரியம் நமக்கு விளங்குகிறது. எரிகோ எப்படி பட்ட பட்டிணம் என்று தெரிந்தால் அவன் ஏன் அங்கு போனான் என்று விளங்கி கொள்ளலாம்.

*. எரிகோ வேசிகள் பட்டிணம் (யோசுவா 2:1)

*. எரிகோ பேரீச்சை மரங்களின் பட்டிணம். (உபா 24:3)

எனவே இந்த மனுஷன் இவைகளில் எதை எதிர்ப்பார்த்து போனானோ நமக்கு தெரியாவிட்டாலும் இவை இரண்டும் எருசலேமில் இல்லை. எனவே தான் இவன் எருசலேமில் வாழ்வதில் திருப்தியடையாமல் எரிகோவிற்கு போனான்.

இன்றும் எருசலேமாகிய கர்த்தரின் சபையில் நல்ல ஐக்கியம் கொள்ளாமல் மாய்மாலம் பண்ணுகிறவர்கள் யார் என்று கண்டுபிடித்து விடலாம். உலக சிநேகம் உள்ளவர்களே எருசலேமை விட்டு எரிகோவிற்கு போவார்கள்.

**"பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை" (சங் 1:5)**

எருசலேமை விட்டு எந்த காரணத்தை சொல்லி கொண்டு போனாலும் இவர்களுக்கு வரப்போகும் இழப்பையும், ஆபத்தையும் அறிந்தால் இவர்கள் எருசலேமை விட்டு போக மாட்டார்கள்.

**எருசலேமை விட்டு போகிறவன்**

**முதலாவது கள்ளர் கையில் (சாத்தான்) அகப்பட்டான்.**(லூக் 10:36) இவர்களை முதலாவது சாத்தான் சந்திப்பான். இவர்களின் நண்பர்கள் பிசாசாகிவிடுவான் இவர்களை பிசாசே வழிநடத்துவான். இவன் செய்யும் பாதகம் என்ன?

அவன் வஸ்திரங்களை உரித்து கொள்வார்கள். அதாவது இவனின் இரட்சிப்பின் வஸ்திரங்களையும் நீதியின் சால்வையையும் எடுத்து கொள்வார்கள். அவனின் பரிசுத்த ஜீவியம் பறிபோய்விடும். நீதியுள்ள நடக்கையையும் இழந்து போவான் அவர்களுக்கு ஆவியானவரின் எச்சரிப்பு என்ன?

இதோ திருடனை போல வருகிறேன். தன்மானம் காணபடத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக் கொண்டு தன் வஸ்திரங்களை காத்து கொள்கிறவன் பாக்கியவான். (வெளி 16:15)

**இரண்டாவது நஷ்டம் அவன் காயப்படுவான் இவனை சாத்தான் காயபடுத்துவான்.** கர்த்தரோ காயம் கட்டுவார். விபத்துகள், ஆபத்துகள், காயபடுதல்,

இவர்களுக்கு உண்டாகும். கர்த்தர் ஒருவரையும் காயப்படுத்த மாட்டார். சாத்தான்தான் தன்னிடம் அகப்படுகிறவர்களை காயப்படுத்துவான்.

**மூன்றாவது நஷ்டம் என்னவென்றால் குற்றுயிராக்கிவிடுவான்.** ஆங்கிலத்திலே (Half dead) பாதி மரணம் என்று போட்டிருக்கிறது. நல்ல வேளை முழு உயிரையும் எடுக்க அவனுக்கு அதிகாரம் இல்லை. தேவ பிள்ளைகளின் ஜீவன் கர்த்தரின் அதிகாரத்தில் இருக்கிறது. விசுவாசிகளுக்கு மரணத்தை கொடுக்க சாத்தானால் முடியாது. பின் வாங்கிச் செல்கிறவர்களை குற்றுயிராக்கிவிடுவான்.

**நான்காவது இழப்பு என்னவென்றால் மற்றவர்களால் கைவிடப்படுவான்.** ஒரு லேவியன் அந்த வழியாய் வந்தான் ஒரு ஆசாரியனும் அந்த வழியாய் வந்தான். எரிகோவில் 12000 ஆசாரியர்கள் வாழ்ந்ததாக சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். எருசலேமில் இருந்து எரிகோ 18 மைல் தூரத்தில் இருந்ததாம். அனுதினமும் சில ஆசாரியர்களும், லேவியர்களும் இந்த வழியில் சென்றார்கள். அவர்கள் இவனை கண்டாலும் ஒருவர் கூட இவனுக்கு மனதுருகவில்லை பரிதவிக்கவில்லை, உதவி செய்யவும் இல்லை.

எருசலேமை விட்டு போனவர்களுக்கு ஒருவரும் உதவி செய்ய முன் வரமாட்டார்கள். பின்மாற்றகாரர்களுக்கு உதவி செய்ய ஒருவன் கூட அவர்கள் பட்சத்தில் இருக்க மாட்டார்கள். எதிர்பார்க்கிற மனுஷராலும் ஏமாற்றமடைவார்கள். நம்பினவர்களும் அவர்களுக்காக இரக்கம் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் இவன் எருசலேமை விட்டு போனான். தேவன் தந்த சபையின் ஐக்கியத்தை விட்டு போகிறவன் நிலைமை இப்படித்தான் எல்லாராலும் கைவிடபடுவான்(லூக் 10:32)

இவனுக்கு இரக்கம் கொள்ளும் நல்ல சமாரியன் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. இவர் இவனை கண்டு மனதுருகி அவனது காயத்தை கட்டி, தன்னுடைய சுய வாகனத்தில் ஏற்றி சத்திரத்திற்கு கொண்டு வந்தார். எனவே எனக்கருமையான தேவ ஜனமே எருசலேமை விட்டு போகாதிருங்கள். "நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வை காண்பாய்" என்ற வசனத்தின்படி நடந்து கொள்ளுங்கள்.

**தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக**

## தெரியுமா உங்களுக்கு!

1. ஜெருசலேம் நகரிலுள்ள ஒலிவ மலையில் இயேசு கிறிஸ்துவின் மலைச் சொற்பொழிவு பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, சலவை கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டில் இந்திய மொழிகளில் இரண்டே இரண்டுதான் இடம் பெற்றுள்ளன. ஒன்று தமிழ், மற்றொன்று சமஸ்கிருதம்.

2.ஜெருசலேம் நகரிலுள்ள ஒரு மாதா கோவிலில், ஆண்டில் இரண்டு நாள் மட்டுமே கிறிஸ்தவர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். மற்ற நாட்களில் முகமதிய சகோதரர்கள் அதை பள்ளிவாசலாக பயன்படுத்துகிறார்கள்.

## ஜெபவீரராக விளங்க சில ஆலோசனைகள்

(கடந்த மாத இதழின் தொடர்ச்சி)

### உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்

உள்ளத்தில் ஜெப ஆர்வம் இல்லாவிட்டால் முழங்கால் முடங்காது. உள்ளத்தில் பேச அக்கினியை அனல் மூட்டி எழுப்பி விடுங்கள்.

ஜெபிக்க போகிறேன், ஜெபிக்க போகிறேன் , நான் ஜெபித்தே தீருவேன். நான் ஜெபிக்க போகிறதை யாராலும் தடுக்க முடியாது. நான் நீண்ட நேரம் ஜெபிக்க போகிறேன் என்று மீண்டும் மீண்டும் சப்தமாக கூறுங்கள். உங்களுக்குள்ளே அந்த ஜெப உள்ளுணர்வை ஏற்படுத்தி கொள்ளுங்கள்.

வீட்டின் பல பகுதிகளிலும் " ஜெபிக்க வேண்டும்" என்கிற வாசகத்தை எழுதி தொங்க வையுங்கள், அதை சமையல் அறை, சாப்பாட்டு அறை, வேலை செய்யும் அறை, படுக்கும் அறை, ஆகிய எல்லா இடங்களிலும் ஒட்டுங்கள். அது உங்களை பார்த்து " ஜெபிக்க வேண்டும்" என்று இடைவிடாமல் பேசட்டும். ஜெபிக்க வேண்டும் என்ற சிந்தனை உங்கள் உள்ளத்தில் அக்கினி தீயாக வேலை செய்யட்டும் அவ்வப்போது ஆங்காங்கே முழங்கால் படியிடுங்கள்.

ஒரு முகமதிய சகோதரி சொன்னார்கள். நான் என் குளியலறையிலும் முழங்காற்படியிட்டு ஜெபிப்பேன் அவர்கள் சாட்சி எனக்கு சவாலாக இருந்தது.

எப்போது நேரம் வாய்க்குமோ, அப்பொழுதெல்லாம் கர்த்தரின் பொன் முகத்தை நோக்குங்கள். சமையல் நடந்து கொண்டிருக்கட்டும், வேக வைக்கிற பதார்த்தங்கள் இன்னும் 10 நிமிடம் ஆகும் என்றால் இந்த இடை பட்ட நேரத்தில் முழங்காற்படியிட்டு கர்த்தரை துதியுங்கள்.

அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருக்கீறீகளா? ஒரு வேலை முடிந்த உடன் ஒரு நிமிடம் தலையை தாழ்த்தி யாரும் அறியா வண்ணம் ஜெபியுங்கள். அன்பு சகோதர சகோதரிகளே உங்கள் இருதயத்திற்குள் ஜெப சிந்தை அந்த வாஞ்சை தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கட்டும்

உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன(1 தீமத்தேயு :1:6)

அடுத்த இதழிலும் தொடரும்

## தெருப் பிரசங்க விஞ்ஞானி.

சர் ஐசக் நியூட்டன் (1642–1727) என்பவர் ஒரு பிரிட்டிஸ் கணித மேதையும் பௌதிக விஞ்ஞானியுமாவார். இவர்தான் முதல் முதலில் புவியீர்ப்பு விசையையும், சலனம் கணித முறை ஆகியவற்றையும் கண்டுபிடித்த பெரும் விஞ்ஞானி என்பதை நீங்கள் அறிவீர்கள். விஞ்ஞான சாஸ்த்திரத்தின் நிறுவனர் என்றழைக்கப்பட்ட இவரது கல்லறையின் மேல் விலையில்லா மனிதருள் மாணிக்கம் என்று எழுதப்பட்டுள்ளது. இவர் ஒரு தேவபக்தனாய் இருந்து கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியம் செய்தவர். இவர் ஒரு விஞ்ஞானியாக இருந்தாலும் . கைபிரதிகளை விநியோகம் செய்து தெரு பிரசங்கம் செய்து சுவிசேஷம் அறிவித்தவர் . விஞ்ஞானத்தைப் பற்றி இவர் எழுதிய புத்தகங்களின் மொத்த வார்த்தைகள் 12 லட்சம். ஆனால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பற்றி எழுதிய புத்தகங்களின் மொத்த வார்த்தைகள் 17 லட்சம். இவர் எத்தகைய பக்தர் என்று நீங்களே சிந்தித்து கொள்ளுங்கள். தெருபிரசங்கமும். கைபிரதிகளும் கொடுக்கும் ஊழியரே நீங்கள் சாதாரணமானவர்கள் அல்ல. நீங்கள் இந்த விஞ்ஞானியுடன் ஒரே வரிசையில் இருக்கிறீர்கள் உற்சாகமாய் உங்கள் ஊழியத்தை செய்யுங்கள்

## டிசம்பர் மாத விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பெ | 7 யெ | ர் | செ | பா | 8 கா |
| ன் | க் | 2 சோ | ரா | 3 சே | த் |
| ல் | ஷா | கோ | 4 அ | கி | யா |
| வா | ன் | ல் | பி | ர் | லே |
| 9 சூ | 10 நோ | வே | சா | 6 மா | 12 கீ |
| ப் | வா | 5 யோ | ய் | 11 தா | |

## டிசம்பர் மாத வேத வினாக்களுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி

Sis. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்

Sis. சுகந்தி தம்புக்குமார்

Sis. ஹேனா எசேக்கியேல்

Sis. மெர்சிலின் தயா ஏசுரெத்தினம்

Bro. ஜாண்சன்

## “நான் நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் ” ஏசாயா 51:12

### இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
- செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
- செல்வி. சுஜானா லென்சிபாய்
- செல்வி. ஜாய் சுஹிலின் ஜாய்சன்
- செல்வி. ஏஞ்சலின் அஜிதா மனோகரன்
- செல்வி. ஷெரின் பெனிற்றா ஸ்டாலின்
- செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
- செல்வி. காருண்யா ரவிச்சந்திரன்
- செல்வி. அன்ஷிகா ஸ்டீபன்
- செல்வன். எட்வின் ராஜ்
- செல்வன். கிப்டி ஆல்ப்ரட்
- சகோதரி. சுசீலா லாசர்
- சகோதரி. சான்ட்ரா கோமஸ்
- சகோதரி. லைலா ஆல்ப்ரட்
- சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
- சகோதரி. சுமதி ஐசக் துரை
- சகோதரி. கில்டா பால் பாண்டியராஜ்
- சகோதரி. கிறிஸ்டீனா பிராங்
- சகோதரி. விக்டோரியா ராஜன்
- சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
- சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
- சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
- சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
- சகோ. ப்ரடரிக் செல்வராஜ்
- சகோ. ஐசக்துரை
- சகோ. வேதநாயகம் ஜஸ்டஸ்
- சகோ. ஸ்டான்லி பிரேம்குமார்
- சகோ. செங்குட்டுவன்
- சகோ. ஆரோக்கியராஜ்
- சகோ. செல்வதாஸ்
- சகோ. சீனிவாசன் ராகவன்
- சகோ. தங்கராஜ் ஆல்பஸ் ஜேம்ஸ்






### இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. ராஜா செல்வன்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி – திரு. ஜீவா
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி –திரு. ஜஸ்டின் சுந்தரராஜ்
திருமதி – திரு. செல்வதாஸ்
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி – திரு. வேளாங்கண்ணி
திருமதி – திரு. மணிராஜ்

# 2015 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 4/01/2015 | Pr. ஜோயஸ் அலெக்ஸாண்டர்<br>கிருபாசன சபை (தமிழ்நாடு) | |
| 11/01/2015 | சகோ. அற்புதராஜ் | சகோ. சுகுமார் |
| 18/01/2015 | Rev. பிரைட் செல்வகுமார்.<br>RHEMA BIBLE COLLAGE (தமிழ் நாடு) | |
| 25/01/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஸ்டாலின் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:30 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| புதுவருட ஆராதனை<br>1/01/2015 | சகோ. ஆரோக்கிய தாஸ் | சகோ. ஜெகநாதன் |
| 2/01/2015 | Pr. ஜோயஸ் அலெக்ஸாண்டர்<br>கிருபாசன சபை (தமிழ்நாடு) | |
| 9/01/2015 | சகோ. வில்ஸன் | சகோ. ஐசக் துரை |
| 16/01/2015 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23/01/2015 | Rev. பிரைட் செல்வகுமார்.<br>RHEMA BIBLE COLLAGE (தமிழ் நாடு) | |
| 30/01/2015 | சகோ. அற்புத ராஜ் | சகோ. பிரேம் குமார் |

8/01/2015 முழு இரவு ஜெபம் இரவு 10மணி முதல் காலை 2 மணி வரை

இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி )

30/01/2015 அன்று வாலிப ஐக்கிய கூடுகை மாலை 7 மணிக்கு

இடம் : புதிய ஜெப வீடு (பாஹுல்)

சகோதரிகள் ஐக்கிய கூடுகை – இடம், நாள், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## ஜனவரி மாதத்திற்கான வேத வினா! புதிர்

கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வேத ஆதாரத்துடன் ஏழுதவும் புதிருக்குள் வரும் விடையின் எழுத்துக்கள் அடைப்பு குறிக்குள்( ) குறிக்கப்பட்டுள்ளது. தங்கள் விடைகளை வசனம் மற்றும் அதிகாரத்தின் பெயருடன் குறிப்பிடவேண்டும்

*வலம் இருந்து இடம்*

1. ஒரு கோபுரத்தின் பெயர்: இங்கு பிரயாணம் பண்ணி ஒருவன் கூடாரம் போட்டான்(3)
2. ஒரே நாளில் 1,20,000 பேரை கொன்று போட்டவன் யார். ( 3)
3. இஸ்ரவேலர் இந்த வனாந்தரத்தில் பிரயாணம் செய்தார்கள். ( 4)
4. கத்தியின்றி, இரத்தமின்றி, "இவைகளால்" இரண்டு ராஜாக்கள் துரத்தப்பட்டனர்(3)

*இடம் இருந்து வலம்*

5 இது ஒரு நதி இஸ்ரவேின் கோத்திர எல்லையில் உள்ளது. (2)
6. இஸ்ரவேலர் பயன்படுத்திய கீதவாத்தியங்களில் இது ஒன்று (5)
7. இஸ்ரவேலை இரட்சிக்க எழும்பினவன்.(2)
8. இஸ்ரவேலின் ஒரு கோத்திரத்தார் குடியிருந்த ஊர்களில் ஒன்று ( 2)

*மேலிருந்து கீழ்*

3. இராட்சத சந்ததியான இவனுக்கு மூன்று குமாரர்கள் உண்டு(3)
10.இது ஒரு நீரூற்று இதன் அருகே ஜனங்கள் பாளையமிறங்கினார்கள்.( 3)
11. இஸ்ரவேலை ஆண்ட பிரபலமான ராஜாவின் குமாரன் (2)
8. தன்னுடைய பெயரில் உள்ள கன்மலையில் கொல்லப்பட்ட அதிபதி.(3)
12. தங்கள் தகப்பனின் நாமத்தின்படி மூன்றெழுத்து பட்டணத்தின் பெயரை இரண்டெழுத்தால் அழைத்தனர்.(2)
13. இவன் ஒரு கோத்திர பிதாவின் மூத்த மகன். (2)

*கீழ் இருந்து மேல்*

9. ஒரே எழுத்து இருமுறை வரும் பெயரை உடையவன், இவன் பெத்லகேம் ஊரை சேர்ந்தவன் (2)
7. தன் எதிரியை வெற்றி கொண்ட ராஜாவுக்கு வாழ்த்துக்களையும், வெகுமதிகளையும், தன் குமாரன் மூலமாக அனுப்பினான். (2)

*மூலைக்கு மூலை*

8. இரண்டு ராஜாக்கள் காலங்களில் வாழ்ந்த இவருக்கும் ஒரே பெயர் (6)

<u>விடைகளை கீழ் காணும் அதிகாரங்களில் தேடி கண்டு பிடிக்கவும்</u>

(ஆதியாகமம் 35)(உபாகமம் 2)(எண்ணாகமம் -13)(யோசுவா 16,24)( நியாயாதிபதிகள் 7,8,18 )( 2 சாமுவேல் 6,8,23)(1 நளாா 8,14)(2 -நாளா 25,28)(நெகோமியா 11)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 7 | | | | 8 |
| | | 2 | | 3 | |
| | | | 4 | | |
| | | | | | |
| 9 | 10 | | | 6 | 12 |
| | | 5 | | 11 | |

## வாலிபமே கர்த்தரை தேட சரியான பருவம்

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். ( ஏசாயா 55:6)

தேவன் நம் வாழ்க்கையை மிக அழகாக நேர்த்தியாய் திட்டமிட்டு அமைத்திருக்கிறார். தேவன் அமைத்த திட்டமிட்ட நேர்த்தியான அந்த உன்னத நிலையில் நம்மை பொருத்தி , தேவ சித்தத்தின்படி நம்மை இணைத்துக் கொள்வது மிக உத்தமான தேவ செயலாகும். ஆனால் தேவன் நம்மை வைக்கும் இடத்தில் நாம் சந்தோஷமாய், மகிழ்ச்சியாய் இருக்க வேண்டியது நமது கடமை.

தேவனின் மகத்துவம் நிறைந்த வேதத்தில் பெண்மையினமும் அங்கம் வகிக்கிறது, என்பதை நோக்கும் போது, தேவன் நம்மீது வைத்த சிநேகமும் , கரிசனையும் தான் என்னவென்று சொல்லி விவரிக்க முடியாது.

வேதஅடிப்படையில் வாலிப பிராயத்தில் எப்படி ஆண்டவருக்காக வாழ வேண்டும் என்பதை நாம் பார்ப்போம். "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.(1 தீமத்தேயு 4:12) விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய (வாலிபனான) தீமத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் அடியார் எழுதிய புத்திமதிகளும், கட்டளைகளும் நிரம்பிய நிருபத்தின் ஓர் வசனமே, "மாதிரியாய் இரு" என முடிந்தது ஆகும். அவர் 15 வயதினிலே தேவனுடைய பிள்ளையாய் மாற்றபட்டார் என்பது வேத வல்லுனர்களின் ஆராய்ச்சியின் கூற்றாகும். ஆனால் ஏழு வருடங்களுக்குள் "நற்சாட்சி" பெற்றவன். ( அப் 16:1,2) நற்சாட்சி பெற்றதன் காரணம் மாதிரியாய் இருந்ததால்தான் . எனவே நமக்கு மாதிரியாய் ஜீவிக்க முடியும் என்பதற்கு சவாலான எடுத்துகாட்ட முடியாத காரியத்தை தேவன் வேதத்தில் இடம் பெற செய்திருக்க மாட்டார். நம்மை செய்யவும் சொல்ல மாட்டார். தேவன் பெலபடுத்தும் போது நம்மால் மாதிரியாய் இருக்க முடியும் .

அப் (1:8)ம் வசனத்திலும் தேவன் வானத்திற்கு எடுத்து கொள்ளப்படும் முன் கடைசியாய் சொல்லி போன வார்த்தையும் அதுவே "சாட்சிகளாயிருப்பீர்கள்" வாக்குத்தத்தம் பண்ணபட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டால் மாத்திரமே சாட்சியாய் , மாதிரியாய் ஜீவித்து நற்சாட்சி பெற முடியும். வயதானவர்கள் மரிக்கும் போது கடைசி மணி நேரத்தில் சொல்லி போன வார்த்தைகளை கூடுமானவரை 98% நிறைவேற்றுவார்கள். அழிந்து போகிற மனிதனின் கடைசி வார்த்தைக்கு அப்படிபட்ட மதிப்பும், நிறைவேறுதலும் இருக்குமானால், அழியாத இன்றும் ஜீவிக்கிற நம் ஆண்டவரின் வார்த்தைக்கு பயமும், மதிப்பும், நிறைவேற்ற பிரயாசபடுதலும், எத்தனை அத்தியாவசமானது என்று சிந்திப்பது அவசியம்.

முதலாவது வார்த்தையில் மாதிரியாய் இருக்க கட்டளை, இது பொதுவாக மனிதர்களுக்கு இயலாத காரியம், நம் வார்த்தையினாலே நம்மை ஆண்டவரும் நியாயம் விசாரிப்பார். (மத் 12:37)

வார்த்தைகளை பேசுவதில் ஜாக்கிரதையாய் இல்லையெனில் நம் தேவபக்தி வீணாகி விடுமே. (யாக் 1:26), (1:19) பேசுவதற்கு பொறுமையாய் இருப்போம். (நீதி 1:29) ம் வசனத்தின் படி பாவம் செய்கிறோம்

வார்த்தையினாலே எதிர்த்து பேசுவது, முறுமுறுப்பு, சண்டை, விரோதம், விவாதம், பல தீமைகள் வருகிறது, பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே யாக்கோபு நிருபத்தை அதிக கவனமாய் வாசித்து கைகொள்வோம் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக .ஆமென்

## (நம்மை ) பதம் பார்க்கும் பத்து கேள்விகள்

நம் ஆவிக்குரிய நிலையில் செழிப்பதற்கு கீழ்காணும் கேள்விகளை தினசரி இல்லா விட்டாலும் அவ்வப்போது நம்மை நாமே கேட்டு பார்த்துக் கொள்வது நல்லது இல்லையா?

1. நான் இன்று சந்தித்த அனைவருக்கும் ஓர் வேலைகாரனாகவே இருந்தேனா?
2. நான் என் ஒவ்வொரு கலைகளையும் , பாரங்களையும் ஆண்டவர் மீது வைத்திருந்தேனா.?
3. நான் இன்று எந்த ஒரு மனுஷனின் அபிப்பிரயாங்களையாகிலும் நாடி தேடினேனா?
4. நான் இன்று ஏதேனும் நேரத்தை வீணடித்தேனா அல்லது நான் இந்நாளை பயனுள்ளதாய் செலவழித்தேனா?
5. இன்று தேவன் என்னுடன் பேச விரும்பியதை கேட்பதற்கு நான் விழிப்புடன் இருந்தேனா?
6. நான் என்னால் முடிந்த மட்டும் ஆடம்பரத்தை தவிர்த்து எளிமையாய் வாழ்ந்திட முயற்சித்தேனா?
7. நான் என் பிள்ளைகளிடத்தில் எதேனும் ஆவிக்குரிய பிரயோஜனமான காரியங்களை கலந்துரையாடினேனா?
8. நான் என் மனைவியின் (கணவனின்) வேலையில் உதவி புரிய முயற்சித்தேனா?
9. நான் பெற்ற அதே வெளிச்சத்தை பெறாத யாரேனும் ஒருவரை அலட்சியம் செய்தேனா?
10. என் இருதயத்தில் யாரேனும் ஒருவரைக்குறித்ததாவது ஏதாகிலும் கெட்ட சிந்தனை உள்ளதா?.

## முதலாம் குடி மதிப்பு

கிபி. 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் எகிப்து தேசத்தின், அலெக்சாண்டிரியா பட்டணத்தை புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் தோண்டிய பொழுது கிடைத்த பாஸ்பரஸ்(காகித) ஓலைச் சுவடிகளில் கிமு 20ஆம் ஆண்டு முதல் கிபி 270 ஆம் ஆண்டுவரை வாழ்ந்த ஜனங்களின் குடி மதிப்பு எழுதப்பட்டுள்ளது. ரோமர்கள் 14 வருடங்களுக்கு ஒரு முறை குடிமதிப்பு எழுதப்பட்ட நோக்கம் வரி வசூல் செய்வதற்கும் இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதற்கும் என்று தெரிகிறது.

இதில் யூதர்கள் மதநம்பிக்கை உடையவர்களாக இருந்ததால்,இராணுவத்தில் சேர வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல் இருந்தது. எனினும் ரோம பேரரசர் அகஸ்துராயன் கட்டளைபடி யூதர்களும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டும் என்று கட்டாயம் நேர்ந்தது. அப்பொழுது சிரியா தேசத்திற்கு கிரேனியஸ் (சிரேனியு) என்பவன் கவர்னராக இருந்த போது தான் இயேசு பெத்லகேமில் பிறந்தார். ருகிஸ் என்ற ரோம அதிகாரியின் தலைமையின் கீழ் இந்த குடிமதிப்பு எழுதப்பட்டது. அப்போதைய குடிமதிப்பின் படி யூதேயா தேசம் முழுவதும் 42,33,000 பேர் இருந்தார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. தற்போது அந்த கிமு 20முதல் கிபி 270 வரையிலான குடிமதிப்பெழுதிய பதிவேடுகள் ரோமிலும், ஜெர்மனியிலும், இங்கிலாந்து மியூசியங்களிலும் உள்ளது

# ஆர்தர் மர்காஷியஸ் ஐயர்(1852–1908)

இடையன்குடியில் மிஷினெரியாக இருந்த இராபர்ட் கால்டுவெல் பேராயர் அவர்கள், 1875 ஆம் ஆண்டு விடுமுறைக்கு இங்கிலாந்து சென்றிருந்தபோது இந்தியாவின் தேவைகளைக் குறித்து அறைகூவல் விடுத்தார். அப்போது தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து இந்தியாவில் ஊழியம் செய்ய, தன்னை ஒப்புக்கொடுத்தவர்தான் 22 வயதான வாலிபனான ஆர்தர் மர்காஷியஷ். அவர் ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த போது மருத்துவக் கல்லூரியில் படித்து, முதுநிலை தேர்விற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். மர்காஷியஸ் ஐயரவர்கள் இங்கிலாந்திலுள்ள லெமிங்டன் நகரில் 1852 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் நாள் பிறந்தார். இந்தியாவிற்கு ஊழியம் செய்ய வந்த மாகாஷியஸ் 1875 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 1876 ஆம் ஆண்டு நவம்பர் முடிய இடையன்குடியில், மிஷனெரி கால்டுவெல்லோடு தங்கி, ஊழியப் பயிற்சியைப் பெற்று தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டார். 1876 ஆம் ஆண்டு நாசரேத் பகுதி ஊழியப் பொறுப்பை ஏற்றார். 1877இல் உதவிக்குருப்பட்டமும், 1880இல் முழு குருப்பட்டமும் பெற்றார். இவர் ஆரோக்கியமான உடல் நிலை கொண்டவர் அல்ல, ஆஸ்துமா நோயால் அவதியுற்று வந்தவர், ஆனால் தான் விரும்பி ஏற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றுவதில் ஊக்கமும் ஆற்றலும் கொண்டவர்.

மர்காஷியஸ் ஐயர் நாசரேத்தில் பணியாற்றி வந்தபோது பெருமழை பஞ்சம் மற்றும் காலராவினால் மக்கள் மடிந்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் இறந்ததால் அநேகப் பிள்ளைகள் அநாதைகளாய் பரிதபிக்கப்பட்ட நிலையிலிருந்தனர். அந்த அனாதைப் பிள்ளைகளுக்கென்று 1877–இல் விடுதி ஒன்றை மர்காஷியஸ் ஆரம்பித்தார். அந்த இல்லம் “அனாதை சாலை” என்று அழைக்கப்பட்டது. பின்னர் அது தொழிற்கல்விக் கூடமாக மாறியது. இன்று Art and industrial school என்ற சிறந்த I.T.I ஆகச் செயல்படுகிறது. இதை ஆரம்பித்தபோது பல ஜாதி மாணவர்கள் இங்கு தங்கி கல்வி கைத்தொழிலோடு இயேசுவின் அன்பையும் கற்றனர். அதில் ஒரு சிறுவன் வேதாகம கல்வி பயின்று குருவானவராக மாறினார். அவரே அருள்திரு ஈனமுத்து யோசேப்பு ஐயரவர்கள். 1878– ஆம் ஆண்டு நாசரேத் பெண்கள் போர்டிங் பள்ளியில் படித்த பெண்களுக்கு ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியை ஆரம்பித்தார். பிறகு 1892–ஆம் ஆண்டு மர்காஷியஸ் புதிய நிலம் வாங்கி புதிய கட்டிடம் கட்டி பரிசுத்த லூக்கா மருத்துவமனையென பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீ வைகுண்டம், உடன்குடி, காயாமொழி, காயல்பட்டணம் ஆகிய ஊர்களிலிருந்து வரும் நோயாளிகள் மருத்துவ மனையில் பணியாற்றிய டாக்டர்கள், நர்சுகள் ஆகியோரின் சேவையினால் கிறிஸ்துவின் அன்பை கண்டுகொண்டார்கள். மரத்திலிருந்து விழுந்து படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு வந்த சிறுவன் மர்காஷியஸ் ஐயர் தன்னைக் குணப்படுத்த எடுத்துக்கொண்ட முழு முயறசிகளையும் கண்ணுற்றவனாக தான் குணம் பெறாத நிலையிலும் பெற்றோர் சம்மதத்துடன் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவனாக

மரித்தான். இதைப் பார்த்த அவனது பெற்றோர் தம் சொந்த பந்தங்களோடு கிறிஸ்தவனார்கள். அனைத்து இன மக்களும் கிறிஸ்துவை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு உயர்ஜாதி என்று கருதப்படும் மக்கள் மத்தியிலும் ஊழியம் செய்ய ஆரம்பித்தார்.

1903–ஆம்ஆண்டு நாசரேத் சிறுவர் மிஷன் அமைப்பும், 1904–இல் பெண்கள் சங்கப்பண்டிகையையும் ஆரம்பித்தார். எஸ்.பி.ஜி திருநெல்வேலி கைம்பெண் சங்கத்தை நிறுவினார். 1901–ஆம் ஆண்டில் இச்சங்கம் மூலம் 59 விதவைகள் உதவி பெற்றனர். ஆயுள் காப்பீட்டுத் திட்ட முறைகளை அறியாத அக்காலத்திலேயே 1887–ஆம் ஆண்டு எதிர்கால சகாய நிதி என்ற நிதி அமைப்பை ஏப்ரல் மாதம் முதல்நாள் விக்டோரியா மகாராணியின் பொன்விழா ஆண்டு நினைவாக மர்காஷியஸ் ஐயர் தொடங்கி வைத்தார். 1909–ம் ஆண்டு உபதேசிமாருக்காக மர்காஷியஸ் ஒரு வேதாகம பள்ளியை ஆரம்பித்தார். பிறகு 1930–இல் அது இறையியல் கல்லூரியாக உயர்த்தப்பட்டது. 1971–இல் வேதாகமக் கல்லூரி இங்கிருந்து மதுரை அரசரடிக்கு மாற்றப்பட்டது.

நாசரேத் தபால் அலுவலகத்திற்கு தந்தி வசதியைப் பெற்றுக்கொடுத்தவர் மர்காஷியஸ் ஐயரவர்கள். அதுமட்டுமல்ல 1911–ம் ஆண்டு சாத்தான்குளம்–நாசரேத் ரோடும், 1923–ம் ஆண்டு போடப்பட்ட திருநெல்வேலி–திருச்செந்தூர் ரயில்பாதையும் நாசரேத்திற்கு கிடைத்ததற்கும் காரணம் மர்காஷியஸ் ஐயரின் பெருமுயற்சிதான். 1876–ல் ஊழியத்தை ஆரம்பித்த மர்காஷியஸ் ஐயர் 1878க்குள்ளாக 14 சபைகளை உருவாக்கினார். தமது பணிக்காலத்திற்குள் சுமார் 25–க்கும் அதிகமான புதுச் சபைகளை உருவாக்கினார்.

மர்காஷியஸ் ஐயர் ஆஸ்துமா வியாதியினால் அடிக்கடி துன்பம் அடைந்தார். ஆனாலும் தம் பணியை உண்மையுடன் செய்து வந்தார். 1885–ம் ஆண்டு தம்முடைய ஊழியங்களோடு முதலூர் கிறிஸ்டியாநகரம் வட்டாரங்களின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். 1889–ஆம் ஆண்டு மே மாதத்தில் மர்காஷியாஸ் ஐயர் வியாதியினால் மரித்துவிடும் நிலைக்கு வந்தார். கடற்பயணம் குணத்தைக் கொடுக்குமென ஜப்பானுக்கு கடலில் பயணமானார். மூன்று மாதங்களில் குணமடைந்து மறுபடியும் நாசரேத் வந்தார். 1905–ஆம் ஆண்டு மறுபடியும் பெலவீனப்பட்டார். ஆஸ்திரேலியாவிற்குக் கடற்பயணம் மேற்கொண்டு ஆறு மாதத்திற்குபின் திரும்பி வந்தார். 1908–ஆம் ஆண்டு ஏப்ரல் 15–ஆம் நாள் மர்காஷியஸ் ஐயரின் உடல் மிகவும் பெலவீனமடைந்து ஆஸ்துமா வியாதியும், வாதநோயும் அவரை வேதனைக்குள்ளாக்கியது. 27.04.1908–ல் தேவனுடைய கரங்களில் தம்முடைய ஆவியை ஒப்புவித்தார். அவருடைய சரீரம் நாசரேத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 28.04.1908 மாலை சாயர்புரம் கோடன் ஐயாரால் நாசரேத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தொகுப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர் .

**சுகுமார்**

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதரிகளுக்கு கருணையின் பிதா கல்வாரி நாயகனாகிய அருள் நாதர் இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

# கண்ணீரின் ஜெபம்

தன் பெலத்தினால் தேவனோடே போராடினான். அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்; (ஓசியா 12:3,4)

தேவன் நமக்கு கொடுத்து வைத்திருக்கிற வல்லமையின் ஆயுதங்களில் ஒன்று . கண்ணீரின் ஜெபம். கண்ணீரின் ஜெபம் தேவனுடைய இருதயத்தை உலுக்குகிறது. கண்ணீரின் ஜெபம் தேவதூதர்களை கீழே இறக்குகின்றன. கண்ணீரின் ஜெபம் முழு உலகத்தையும் அதிர பண்ணுகிறது.

ஒரு நாள் யாக்கோபுக்கு தன் அண்ணனை பற்றிய கொடிய பயம் வந்தது. அடுத்தநாள் தன்னுடைய அண்ணனை சந்தித்தே ஆக வேண்டிய சூழ்நிலை. அண்ணன் என்ன மனநிலையில் இருப்பார் என்று யாக்கோபுவுக்கு தெரியவில்லை. அண்ணனுடைய சேஷ்டபுத்திரபாக்கியத்தையும், அண்ணனுக்கு வரவேண்டிய தகப்பனுடைய ஆசீர்வாதத்தையும் தான் தந்திரமாக திருடி கொண்டதினாலே அண்ணன் கொலை செய்து விடுவார் என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார். அதற்கிடையில் ஏசா நானூறு ஆட்களோடு யாக்கோபை எதிர்கொள்ள வருகிற செய்தி வேறு கிடைத்தது.

அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, மிகவும் வியாகுலப்பட்டு, தன்னிடத்தில் இருந்த ஜனங்களையும் ஆடு மாடுகளையும், ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாக பிரித்து,ஏசா ஒரு பகுதியின் மேல் விழுந்து அதை முறியடித்தாலும். மற்ற பகுதிதப்பித்துக் கொள்ள இடம் உண்டு என்றார்.(ஆதி 32:7,8)

உள்ளம் கலங்குகிற அந்த சூழ்நிலையில் யாக்கோபு ஒரு ஆயுதத்தை பயன்படுத்த தீர்மானித்தார். அதுதான் கண்ணீரின் ஜெபம், நேராக யாப்போக்கு என்ற நதிகரையிலே, தேவ சமூகத்திற்கு முன்பாக தனியாக முழங்கால் படியிட்டு ஜெபம் பண்ணஆரம்பித்தார். முழு இரவும் தேவனோடு போராடி ஜெபம் பண்ணினார். அதை குறித்து ஓசியா தீர்க்கதரிசி அழுது அழுது அவரை நோக்கி கெஞ்சினார் என்று குறிப்பிட்டிருக்கிறார்.(ஓசியா 12:4)

கர்த்தர் யாக்கோபின் கண்ணீரை கண்டார். நம்முடைய ஆண்டவர் ஒரு போதும் நம்முடைய கண்ணீரை புறக்கணித்து கடந்து செல்லுகிறவர் அல்ல.! யாக்கோபின் கண்ணீர தேவனை உருக்கிற்று கர்த்தர் யாக்கோபின் சகோதரனை சமாதானத்தோடு சந்திக்க கிருபை செய்தார். அது மட்டுமல்லாமல் அன்றைக்கு யாக்கோபை ஆசீர்வதித்து இஸ்ரவேலாய் மாற்றினார்.

ஆசீர்வாதங்களையும், ஆவியின் வரங்களையும் கண்ணீரின் ஆயுதத்தை பயன்படுத்தி நாம் பெற்று கொள்ள வேண்டும். தேவனுடைய ராஜ்ஜியம் பலவந்தம் பண்ணபடுகிறது. பலவந்தம் பண்ணுகிறவன் அதை பிடித்து கொள்கிறான்.

தேவனுடைய பிள்ளைகளே, உங்களை அநேகம் பேர் வீணாக பகைத்து கொண்டிருக்கிறார்களா? எதிராளியாய் எழும்புகிறார்களா? உங்களை பயமுறுத்தி அவதூராய் பேசுகிறார்களா? யாக்கோபின் கண்ணீரை நினைத்துக் கொள்ளுங்கள் யாக்கோபின் தேவன் நிச்சயமாகவே உங்கள் கண்ணீர் யாவையும் துடைத்து, உங்களுக்காக வழக்காடுவார். உங்களை விடுவித்து உயர்ந்த அடைகலத்திலே வைப்பார்.

அன்னாள் கண்ணீரின் ஜெபம் ஒரு சாமுவேல்!. ஒரு தீர்க்கதரிசி பிறப்பை உருவாக்கியது.அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி,(1 சா 1:10)

மார்த்தாள் மரியாளின் கண்ணீர் மரித்த லாசருவை உயிர்பெற வைத்தது.

எசேக்கியா ராஜாவின் கண்ணீர் அவருக்கு ஆயுசு நாளை கூட்டி கொடுத்தது."கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்.( ஏசாயா 38:5)

நம்முடைய கண்ணீர் அவருடய கணக்கில் இருக்கிறது. என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?(சங்கீதம் 56:8)

கண்ணீர் அவமான சின்னமல்ல. அது தேவ பெலத்தின் சின்னம், கிறிஸ்துவின் முன்மாதிரி சின்னம். அதுவே நமது வெற்றியின் சின்னம். கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான், ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்.(சங் 126:5,)

அன்பான தேவனுக்கு பிரியமானவர்களே

எப்பக்கமும் தோல்விகளா? நீண்டகால போராட்டங்களா? கண்ணீரின் ஆயுதத்தை பயன்படுத்துங்கள், கண்ணீரோடு ஜெபிப்பதற்கு முழங்கால் படியிட்டுவிடுங்கள். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நம்முடைய ஆண்டவர் ஒரு நாளும் புறக்கணிக்க மாட்டார்.

கண்ணீரின் விதைகளை தேவ சமுகத்திலே ஊற்றிவிடுங்கள், கண்ணீரின் விதைகள் இருளையும் அந்தகாரத்தையும் நீக்கி மகிமையையும், மகத்துவத்தையும் விளைய செய்யும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும், கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். (1 கொரி 15:42,43)

கர்த்தர் உங்கள் அனைவரோடும் கூட இருப்பாராக ! ஆமென்

திக்கற்ற பிள்ளைகளின் ஊழியப்பொறுப்பாளர் –சகோ. எபிநேசர் (66857827)
இந்திய தேச மிஷனரி ஊழியப்பொறுப்பாளர் – சகோ. ஆரோக்கியராஜ் (66159784)
போக்குவரத்து ஊழியப்பொறுப்பாளர் – சகோ. வில்ஸன் (99259975)

# பாடகர்க் குழு ,அனைத்து தமிழ் திருச்சபையின் பாடல் ஆராதனை



















உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்
செயற்குழு உறுப்பினர்கள்
தலைவர் - சகோ. ரவிச்சந்திரன்
23913675 - 66889706
செயலாளர் - சகோ. ஜெசேகர்
23711698 - 96646444
பொருளாளர்- சகோ. ஆரோக்கியதாஸ்
99870126
பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . ஜெயகொடி ஜான் வெஸ்லி
23731904 - 99145593
வாலிப ஐக்கிய தலைவர் - சகோ. அற்புதராஜ்
60692485
Blessed & Happy
New year
2015
Church Website Address - ahmaditamilcongregation.org
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Postel Address – Your name – Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait
Private Circulation only